**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 122/2024**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. நாகராஜ்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. சண்முகம்** | **Calling** | : | **ஆட்டோ டிரைவர்** |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **58** |
| | | | **Dated** | : | **04.02.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 2 (பட்டியல் சாட்சி 2), **திரு. நாகராஜ்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கின் எதிரியை எனக்குத் தெரியாது. மேலும் இந்த வழக்கின் விபரம் எதுவும் தெரியாது. நான் திண்டுக்கல் பேருந்து நிலைய ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ ஓட்டுநராக வேலை பார்த்தபோது, போலீசார் என்னிடம் வந்து ஒரு கையெழுத்துக் கேட்டார்கள். எதற்காக போட்டேன் என்று எனக்குத் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு

அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

கடந்த 11.05.2018 ம் தேதி மதியம் 01.00 மணிக்கு வீட்டிற்கு தேவையான சாமான்கள் வாங்க திண்டுக்கல், கச்சேரி தெரு சந்திப்பில் அசா. 1 நின்று கொண்டு இருந்தபோது, இந்த வழக்கின் எதிரி தான் பெரிய ரவுடி என்று அசா. 1 ஐ மிரட்டினார் என்றும், அசா. 1 னிடம் மாமூல் கேட்டதற்கு அவர் தன்னிடம் பணம் இல்லை என்று சொன்னார் என்றும், உடனே எதிரி தன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை காட்டி அசா.1ன் சட்டைப் பையில் இருந்த பணம் ரூ. 500/– ஐ எடுத்துக் கொண்டார் என்றும், அக்கம் பக்கத்தில் இருந்த நானும், மற்றவர்களும் உதவிக்கு ஓடிவரவே, எதிரி ரவி என்ற முட்டைக்கண் ரவி கத்தியை அங்கும் இங்கும் சுழற்றி யாராவது பிடிக்க வந்தால் கத்தியால் குத்தி கொன்றுவிடுவேன் என்று மிரட்டியதாகவும், அங்கிருந்த பொதுமக்களும், அந்த வழியாக வந்த வாகன ஓட்டிகளும் சிதறி ஓடிவிட்டனர் என்றும், கடைக்காரர்கள் கடையை அடித்தார்கள் என்றும், இதனால் போக்குவரத்து ஸ்தம்பித்தது என்றும், அதைப் பயன்படுத்தி எதிரி பணத்துடம் தப்பி ஓடிவிட்டார் என்றும், இது சம்மந்தமாக எதிரி மீது நடவடிக்கை எடுக்க காவல் நிலையத்தில் அசா.1 புகார் கொடுத்தார் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 04.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA

Digitally signed by V DEEPA
Date: 2026.02.04 18:10:16 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**S.C. 122/2024**
**Prosecution Witness : 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. சிவசிதம்பரம்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. வையாபுரி** | **Calling** | : | **விவசாயம்** |
| **Village** | : | **வீரக்கல்** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | 39 |
| | | | **Dated** | : | 04.02.2026 |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 3 (பட்டியல் சாட்சி 3), **திரு. சிவசிதம்பரம்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :–**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கின் எதிரியை எனக்குத் தெரியாது. மேலும் இந்த வழக்கின் விபரம் எதுவும் தெரியாது. நான் திண்டுக்கல் பூமார்க்கெட்டிற்கு பூ கொண்டு கொடுத்துவிட்டு திரும்ப வந்து கொண்டிருக்கும்போது, மாரியம்மன் கோவில் அருகே சத்தமாக இருந்தது. என்னவென்று கேட்டதற்கு ஏதோ சத்தம் கேட்டதாக சொன்னார்கள். நான் வேறு எதையும் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு

அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:–**

கடந்த 11.05.2018 ம் தேதி மதியம் 01.00 மணிக்கு வீட்டிற்கு தேவையான சாமான்கள் வாங்க திண்டுக்கல், கச்சேரி தெரு சந்திப்பில் அசா. 1 நின்று கொண்டு இருந்தபோது, இந்த வழக்கின் எதிரி தான் பெரிய ரவுடி என்று அசா. 1 ஐ மிரட்டினார் என்றும், அசா. 1 னிடம் மாமூல் கேட்டதற்கு அவர் தன்னிடம் பணம் இல்லை என்று சொன்னார் என்றும், உடனே எதிரி தன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை காட்டி அசா.1ன் சட்டைப் பையில் இருந்த பணம் ரூ. 500/– ஐ எடுத்துக் கொண்டார் என்றும், அக்கம் பக்கத்தில் இருந்த நானும், மற்றவர்களும் உதவிக்கு ஓடிவரவே, எதிரி ரவி என்ற முட்டைக்கண் ரவி கத்தியை அங்கும் இங்கும் சுழற்றி யாராவது பிடிக்க வந்தால் கத்தியால் குத்தி கொன்றுவிடுவேன் என்று மிரட்டியதாகவும், அங்கிருந்த பொதுமக்களும், அந்த வழியாக வந்த வாகன ஓட்டிகளும் சிதறி ஓடிவிட்டனர் என்றும், கடைக்காரர்கள் கடையை அடித்தார்கள் என்றும், இதனால் போக்குவரத்து ஸ்தம்பித்தது என்றும், அதைப் பயன்படுத்தி எதிரி பணத்துடம் தப்பி ஓடிவிட்டார் என்றும், இது சம்மந்தமாக எதிரி மீது நடவடிக்கை எடுக்க காவல் நிலையத்தில் அசா.1 புகார் கொடுத்தார் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 04.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.02.04 18:10:26 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 122/2024**

**Prosecution Witness : 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. சத்தியமூர்த்தி** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. ராமன்** | **Calling** | : | **TNSTC, மெக்கானிக்** |
| **Village** | : | **பாலகிருஷ்ணாபுரம்** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | 39 |
| | | | **Dated** | : | 04.02.2026 |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 4 (பட்டியல் சாட்சி 5), **திரு. சத்தியமூர்த்தி** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து TNSTC யில் மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். 2018 ம் ஆண்டு கச்சேரி தெருவில் நானும், எனது நண்பர் கார்திக்கேயனும் நடந்து போய்க் கொண்டு இருந்தபோது, திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய ஆய்வாளர் அங்கு நின்று கொண்டு இருந்தார். அவர் எங்களை அழைத்து அங்கே நடந்த பிரச்சனை சம்மந்தமாக தெரியுமா என்றார், நாங்கள் தெரியாது என்று கூறினோம். அந்த சம்பவம் சம்மந்தமாக சம்பவ

இடத்தில் படம் வரைந்ததற்கு எங்களிடம் கையொப்பம் கேட்டார், நாங்கள் போட்டுக் கொடுத்தோம். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்மந்தமாக பிறகு போலீசார் விசாரிக்கவில்லை.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

போலீசார் வரைந்த வரைபடத்தின் கீழே தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால், தற்பொழுது எனக்கு சரியாக நினைவில்லை. ஏதோ எழுதியிருந்தார்கள். அதில் என்ன எழுதப்பட்டு இருந்தது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். என் முன்பாக பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் எதுவும் போலீசார் தயாரிக்கவில்லை என்றாலும், நான் இந்த கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்துத்தான் செய்தேன் என்றாலும் சரியல்ல. எத்தனை மணிக்கு போலீசார் படம் வரைந்தார்கள் என்று கேட்டால், 02.00 – 03.00 மணிக்குள் நாங்கள் சாப்பிடுவதற்காக மதியம் நாங்கள் வந்து கொண்டு இருந்தபோது படம் வரைந்தார்கள்.

**Taken down by me/before me in open court on 04.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.**

V DEEPA

Digitally signed by V DEEPA
Date: 2026.02.04 18:10:36 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**